தமிழ் நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, மார்ச் 5, 1969.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள் விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண்கள் 166 முதல் 173 வரை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

திருமூர்த்தி மலைப்பகுதியை சுற்றுலா மையமாக்கல்.

***174 வினா : திரு. பி. வேலுசாமி :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

கோவை ஜில்லா உடுமலைப்பேட்டை தாலூகாவில் உள்ள திருமூர்த்தி மலைப்பகுதியை ஒரு உல்லாச ஸ்தலமாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : உடுமலைப்பேட்டை நகரப் பெருமக்கள், பஞ்சலிங்கத்திற்கு அருகே திருமூர்த்தி நீர்வீழ்ச்சித் துறை ஒன்று அமைத்து அதன் சுற்றுப்புறத்தையும் ஓய்வுலாக்களுக்குச் சீரமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். இது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : திருமூர்த்தி மலைப்பகுதி மிகவும் ஆரோக்கியமான இடமாகும். இங்கு ஜனங்கள் வந்து செல்வதற்கு சிறந்த இடமாகவும் அமைந்திருக்கிறது. இம்மாதிரி இடத்தை இனிமேலாவது உல்லாச ஸ்தலமாக ஆக்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியாவணிமுத்து: அதற்காக முதலில் ரூ. 18,000 சீரமைப்பு செய்வதற்காக செலவாகும் என்றும், அதில் பாதித் தொகையை அதாவது ரூ. 9,000 அங்கே இருக்கிற நகர பெருமக்கள் ஏற்றுக்கொள்வதாகவும் முடிவு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆனால் மீண்டும் பரிசீலனை செய்யும்போது அதற்கு 34,400 ரூபாய் செலவாகும் என்றும் அதிலே 10,000 ரூபாய் பொதுமக்கள் தருவதாகவும் ஒப்புக்கொண்டார்கள். அது பரம்பிகுளம் ஆளியாறு திட்டத்தை நடத்துகின்ற துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அது பரிசீலனையில் இருக்கிறது. இந்தப் பணிக்காக அந்தத் துறைக்கு 21,400 ரூபாய் வரை மான்யம் கொடுப்பதாக இருக்கிறது.

திருமதி. வி. ப. பழனியம்மாள் : தலைவர் அவர்களே, திருமூர்த்தி மலையிலுள்ள கோவிலுக்கு நிறைய பக்தர்கள் சென்றுவருகிறார்கள். அவர்கள் அங்கு தங்குவதற்கு வசதிகள் இல்லாத காரணத்தால் உடனே திரும்பவேண்டி இருக்கிறது. ஆகையால், அந்த இடத்தில் ஒரு டூரிஸ்ட் பங்களா அமைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அங்கு தங்குவதற்கு வசதி செய்யும் திட்டம் செயற்குறிப்பில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

திரு. சு. துரைசாமி]: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருமூர்த்தி மலைப்பகுதிக்கு நிறைய பேர் வருகிறார்கள். ஆகவே அந்தப் பகுதியை வாச ஸ்தலமாகச் செய்வதற்கும், ஒரு டூரிஸ்ட் பங்களா கட்டுவதற்கும் வேலைகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : விரைவிலே ஆரம்பிக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : As the climate of that place is supposed to be very salubrious and it is supposed to be the 'Poor man's Ooty', what are the other attractions, apart from the temple in the Tirumurthy Hills which warrant it to be converted as a tourist centre?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : திருமூர்த்தி மலையிலே இருக்கிற ஆலயத்தைவிட அங்கே இருக்கிற நீர்வீழ்ச்சிதான் இந்தத் திட்டத்திற்கு ஏதுவாக இருக்கிறது. இந்த நீர்வீழ்ச்சியும் கோவிலும் இருப்பதால்தான், இதை ஒரு உல்லாச பயணிகள் இடமாக ஆக்குவதற்கு முயற்சி செய்கிறோம். அது பொதுப்பணித்துறை மூலமாகச் செய்யப்படுகிறது.

பெருந்துறையில் உள்ள உறுக்கி நோய் நலம் பேண் மருத்துவமனை

* 175 வினா : **திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா]:

பெருந்துறை T. B. சானிடோரியத்துக்கு ஆண்டுதோறும் அரசு வழங்கும் மானியம் எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ரூபாய் ஒரு லட்சம் இரண்டு தவணைகளில் கொடுக்கப்படுகிறது

திரு. சு. துரைசாமி : பெருந்துறையிலே இருக்கிற டி. பி. சானிடோரியத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சம் ரூபாய் கொடுப்பதாக அறிவித்தார்கள். ஒரு லட்சம் ரூபாய் பெறக்கூடிய அந்த சானிடோரியத்திற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட ஆலோசனைக் குழு இல்லை. அதை நடத்துபவர்கள் தாங்கள் சொந்தமாக நடத்துவதைப் போல் நடத்துகிறார்கள். பொதுவாக நடத்துவதைப்போல் நடத்தப்படுவதில்லை. ஆகையால் சட்டமன்ற உறுப்பினர்களையும், பாராளுமன்ற உறுப்பினர்களையும் கொண்ட ஆலோசனைக்குழு ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அதைப்பற்றிய விளக்கங்கள் குறிப்பிலே இல்லை. இதுபோன்ற, டி. பி. சானிடோரியத்திற்குத் தனியாகக் குழு போட்டிருப்பதாகத் தகவல் இல்லை. பொதுவாக அரசாங்க மருத்துவ மனைகளுக்குத்தான் ஆலோசனைக் குழு அமைக்கிறோம். ஆனால், இதுபோன்ற சானிடோரியத்திற்கு குழு அமைத்திருப்பதாகத் தெரியவில்லை.

திரு. கே. என். குமாரசாமி : பெருந்துறை டி. பி. சானிடோரியத்திற்கு சிகிச்சைக்காக வருகின்றவர்கள் இடவசதி இல்லாமல் அவதிப்படுகிறார்கள். கோவையைப் பொறுத்தவரை அது ஒரு தொழில் பகுதியாக இருப்பதால் 100-க்கு 65 சத விகிதத்தினரை இந்த நோய் பற்றிக்கொள்வதினால் அவர்களுக்கு சிகிச்சை அளிக்கக்கூடிய முறையில் இடவசதி ஏற்படுத்தி அந்த சானிடோரியத்தை விரிவுபடுத்த அரசாங்கம் முன்வருமா ? அல்லது கோவையிலே ஒரு டி. பி. மருத்துவ மனையை ஆரம்பிக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?